# 11-09-2023 செய்தி

## சீனாவின் பட்டுப்பாதைக்கு சவாலாகும் இந்தியாவின் புதிய பாதை

- பண்டையக் காலத்தில் பட்டு உற்பத்தியின் தாயகமாக திகழுந்த சீனா, அதை உலகெங்கும் கொண்டு சேர்க்க பயன்படுத்திய வழித்தடம் தான் 'பட்டுப்பாதை'.

**சீனாவின் 'ஒரே பாதை ஒரே சாலை' திட்டம்**

- ஒரே பாதை ஒரே சாலை (ஒன்பெல்ட் ஒன் ரோடு என்ற, பொருளாதாரத்துக்கான புதிய பட்டுப் பாதை திட்டத்தை சீனா தொடங்கியுள்ளது. இது சீன அதிபர் ஜின்பிங்கின் கனவு திட்டம் ஆகும்.
- உலகின் பல நாடுகள் வழியாக மேற்கொள்ளப்படும் இந்த மெக ா திட்டத்தில் நெடுஞ்சாலைகள், புதிய துறைமுகங்கள், நீர்வழித்தடங்கள் என்று உள்கட்டமைப்பு வசதிகள் பிரம்மாண்டமாக மேம்படுத்தப்படும்.
- கடந்த 2013 ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டத்தில் 150 நாடுகள் இணைந்துள்ளன. இதன் செலவு மதிப்பீடு சுமார் ரூ.332 லட்சம் கோடி என்ற போதும், மேலும் உயரக்கூடும் என்று கருதப்படுகிறது.

**கவலை**

- நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்காளதேசம், மாலத்தீவு, இலங்கை ஆகியவை இந்த திட்டத்தில் இணைந்துள்ளதால் இந்தியாவுக்கு பாதுகாப்பு சார்ந்த பதற்றத்தையும் உருவாக்கியிருக்கிறது. அதிலும் பாகிஸ்தானை இணைக்கும் 'ஒரே பாதை ஒரே சாலை' திட்ட நெடுஞ்சாலை, ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாகத்தான் செல்கிறது.

**புதிய பொருளாதார வழித்தடம்**

- இந்தியா – மத்திய கிழக்கு நாடுகள்–ஐரோப்பாவை இணைக்கும் புதிய பொருளாதார வழித்தடத்துக்கான திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவுடன், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ளன.
- இதன் மூலம் இந்தியா, மேற்கு ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ரெயில், கடல் வழியில் இணைக்கப்படும்.
- இதனால் இந்த நாடுகளுக்கு இடையில் விரைவாகவும், செலவு குறைவாகவும் சரக்குகளை எடுத்துச் செல்ல வழி ஏற்படும். இந்த திட்டத்தில் இணைந்துள்ள நாடுகளில் பெருமளவில் உள்கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

**தலைவர்கள் பாராட்டு**

- இந்தியாவையும், மேற்கு ஆசியாவையும் இணைக்கும் கிழக்கு–மேற்கு வழித்தடம், மேற்கு ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் வடக்கு வழித்தடம் என இரு பெரும் பிரிவுகளாக இந்த திட்டம் அமையும்.
- இந்தியாவுடன் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டான், இஸ்ரேல், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளை இணைக்கும் இத்திட்டத்தில் துபாய் துறைமுகம் முக்கிய இணைப்பு மையமாக இருக்கும்.

SURESH

## இந்தோனேஷிய பாட்மிண்டனில் பட்டம் வென்றார் கிரண் ஜார்ஜ்

- இந்தோனேஷியாவின் மேடன் நகரில் நடைபெற்று வந்த இந்த தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 50ம் நிலை வீரரான இந்தியாவின் கிரண் ஜார்ஜ், 82ம் நிலை வீரரான ஜப்பானின் கூ தகாஹாஷியை எதிர்த்து விளையாடினார்.

## 19 வயதில் சாம்பியன் பட்டம் வென்றார் கோ கோ காஃப்

- அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் பெலாரஸின் அரினா சபலெங்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார் 19 வயதான அமெரிக்காவின் கோ கோ காஃப். இதன் மூலம் 1999 ம் ஆண்டுக்குப் பின்னர் இளம் வயதில் பட்டம் வென்ற வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

## பெல்ட் அன்ட் ரோடு திட்டம்

- ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் ஆசியாவை சாலை மற்றும் கடல் மார்க்கமாக இணைக்க பெல்ட் அன்ட் ரோடு(பிஆர்ஐ) திட்டம் செயல்படுத்தப்படும் என சீனா அறிவித்தது.
- ஜி7 அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளில் இத்தாலி மட்டுமே கடந்த 2004ம் ஆண்டு பிஆர்ஐ திட்டத்தில் இணைந்தது. இந்த சூழ்நிலையில், சீனாவுடனான பிஆர்ஐ ஒப்பந்தம், எங்கள் நாட்டின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை என இத்தாலி வெளியுறவு அமைச்சர் அந்தோனியோ கஜானி இந்த மாத தொடக்கத்தில் கூறியிருந்தார்.

## உலகக் கோப்பை வில்வித்தையில் வெள்ளி வென்றார் பிரதமேஷ் ஜாவ்கர்

- உலகக் கோப்பை வில்வித்தை போட்டி மெக்சிகோவின் ஹெர்மோசில்லோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான காம்புண்ட் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரதமேஷ் ஜாவ்கர், டென்மார்க்கின் மத்தியாஸ் புல்லர்டனை எதிர்த்து விளையாடினார்.